**கவனிக்க** .- *2016.05.06 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1967 - 2016 මැයි මස 13 වැනි සිකුරාදා - 2016.05.13**

*1967 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

***(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)***


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 940 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க** .- *பீ. வை. துடாவே சமூக நலனோம்புகை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, மாச்சு மாதம் 18 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

***முக்கிய அறிவித்தல்கள்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2016, யூன் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, மே மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## கண்டி மாநகர சபை

*1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க களரிகளுக்கு உரிமம் அளித்தல் சட்டம்*

இங்கு கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களின் மூலம் அவர்களுடைய பெயருக்கு முன்பதாக குறிப்பிடப்பட்டுள்ள சனசமூக நிலையமானது அதில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் நடாத்திச் செல்வதற்காக 2016 ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப்பத்திரத்தை சமர்ப்பித்துள்ளார் என்பதை 1975 ஆம் ஆண்டின் 17 ஆம் களரிகளுக்கு உரிமம் அளித்தல் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் அறியத்தருகின்றேன்.

இச்சமூக நிலையத்திற்கு அருகில் அல்லது சமூக நிலையம் செய்வதற்காக எதிர்பார்க்கப்படும் இடத்திற்கு அருகில் வசிக்கும் யாதுமொரு நபர் இச்சனசமூக நிலையத்திற்கு வழங்கும் அனுமதிப்பத்திரத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாக இருப்பின் இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட முதலாம் நாள் தொடக்கம் நான்கு கிழமைக்குள் தமது எதிர்ப்பிற்கான காரணத்தை எழுத்து மூலம் இரண்டு பிரதிகளுடன் எனக்கு சமர்ப்பிக்கும்படி இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

**அட்டவணை**

| விண்ணப்பதாரியின் பெயர் | சனசமூக நிலையத்தினது தலைவரா/செயலாளரா | சனசமூக நிலையத்தின் பெயர் | சனசமூக நிலைய நடவடிக்கைகளை நடாத்திச் செல்ல எதிர்பார்க்கும் இடம் |
|---|---|---|---|
| செயலாளர் | செயலாளர் | த கண்டி ஸ்போட்ஸ் கிளப் | நித்தவெல, கண்டி |

கண்டி மாநகர பிதா.

மாநகர சபை அலுவலகம்,
கண்டி,
2016, ஏப்பிறல் 20.

5-165

---

## ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை

*(252 ஆம் அத்தியாயமான) மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 37 (1) ஆம் பிரிவின்கீழ் செய்யப்படும் அறிவித்தல்*

(252 ஆம் அத்தியாயமான) மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 37 (1) "ஆ" பிரிவின் பிரகாரம், மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தின், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையினால் 1945 ஆம் ஆண்டைக் கொண்ட 2015.12.11 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் ஸ்ரீ ஜயவர்தனபர கோட்டே மாநகர சபைக்குச் சொந்தமான பாதைகளாக பிரகடனப்படுத்தப்பட்ட இங்கு கீழே குறிப்பிடப்படும் பாதைக்கு முன்னால் தரப்பட்டுள்ள நீளம் மற்றும் அகலத்தின்படி ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபைக்கு சொந்தமான ஆதனமாக கருதி பராமரிக்கப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது.

சாந்தா பீ. வியனகே,
மாநகர ஆணையாளர்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே,
2016, ஏப்பிறல் 22.

**அட்டவணை**

| தொடர் இல. | வீதியின் பெயர் | எல்லையிலிருந்து வரை | நீளம் | அகலம் |
|---|---|---|---|---|
| 1 | ராஜகிரிய, ராஜகிரிய வீதி, 2 ஆம் ஒழுங்கை | 56/10- 56/13, 62, 68, 68/2, 68/4, 68/5, 68/6, 68/6ஏ, 68/6ஏ1/1, 68/7, 68/7ஏ, 68/7பீ, 68/8ஏ, 68/8 ஏ 1/1, 68/9, 68/10, 68/11, 68/11ஏ, 72, 88 | 375' | 8' தொடக்கம் 10' வரை |

5-204

---

## யட்டிநுவர பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 (1) ஆம் பிரிவின் கீழ் விடுக்கும் அறிவித்தல்*

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆவது பிரிவின்கீழ் மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில் யட்டிநுவர பிரதேச சபையால் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதைகள் யட்டிநுவர பிரதேச சபைக்குச் சொந்தமான பாதையென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இது பற்றி இப்பிரதேசத்தின் பொதுமக்கள் அல்லது பாதையுடன் சம்பந்தப்படும் காணி உரிமையாளர்கள் எவரும் இருப்பின், தமது உரித்துரிமையை அலலது எதிர்ப்பைக் காட்ட வேண்டுமெனின், இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒரு மாத காலத்துக்குள் தமது உரித்துரிமையை நிரூபிப்பதற்கென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 (2) ஆவது பிரிவின்படி செயற்படுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இந்த கால எல்லைக்குள் இந்த அறிவித்தல் பற்றிய எதிர்ப்புக்கள் முன்வைக்கப்படவில்லையெனின், பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதைகள் யட்டிநுவர பிரதேச சபைக்கு உரித்தான பாதைகளாகக் கொள்ளப்பட்டு நிரந்தரமாகப் பராமரிக்கப்பட்டு வரும் என்பதைப் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு இத்தால் வெளியிடுகின்றேன்.

டபிள்யூ. ஏ. எல். துஷாரி ஜயரத்ன,
செயலாளர்,
யட்டிநுவர பிரதேச சபை.

யட்டிநுவர பிரதேச சபை அலுவலகம்,
எம்பில்மீகம,
பிலிமத்தலாவை.

**அட்டவணை**

| தொடர் இல. | பாதையின் பெயர் | ஆரம்பம் | முடிவு | இடதுபக்கம் | வலதுபக்கம் | நீளம் மீற்றர் | அகலம் மீற்றர் | நில வரைபட உறுதி இல. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஓவிட்டகெதரவத்த வத்த செல்லும் பாதை | பொத்தபிட்டிய வீதி | ஜோர்ஜ் பெரேரா வின் காணி | 1. கே. ஜீ. சீ. குலதுங்க<br>2. கே. ஜீ. டி. கொடித்துவக்கு<br>3. டீ. சிறிசேன | 1. கே. எஸ்னா கொடிதுவக்கு<br>2. ஜீ. டி. பெரேரா<br>3. ஆர். பி. ரூபசிங்ஹ<br>4. கே. கருணாரத்ன | 130 | 2.43 | 2204 |
| 2 | கிறிஸ்தோபர் வீதியையும் பிரகதி மாவத்தையும் இணைக்கும் இடைப் பாதை | கொன்ஹிந்த மாவத்த | பிரகதி மாவத்த | 1. எஸ். கனேகெதர<br>2. ஏ. எம். தனபால<br>3. சுபோத திலகரத்ன<br>4. எஸ்.கே. சேரசிங்ஹ<br>5. பி. பத்மநாதன்<br>6. டக்ளஸ் சேவியர்<br>7. ஆர். மனுவேல் | 1. என். எல். எஸ். தயானி<br>2. என். ஜயசுந்தர<br>3. வி. கதிரேசு<br>4. எம். எச். எம். ராபிக | 168 | 1.82 மீ. | 2470A |

| தொடர் இல. | பாதையின் பெயர் | ஆரம்பம் | முடிவு | இடதுபக்கம் | வலதுபக்கம் | நீளம் மீற்றர் | அகலம் மீற்றர் | நில வரைபட உறுதி இல. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | வளவ்வேகும்புர, ரண்கொந்த கும்புர மற்றும் பெரவாங்க வரை செல்லும் பாதை | வளவ்வேகும்புர | பெரவாங்க வரை | 1. எம். ஜீ. ஜே. நவரத்ன<br>2. ஐ. எம். ரம்மெனிக்கே<br>3. எம். ஜீ. ஜீ. நவரத்ன மெனிக்கே<br>4. எம். ஜீ. பீ. நவரத்ன<br>5. எம். ஜீ. எச். கே. நவரத்ன<br>6. ரீ. எம். கே. எலிகேவல<br>7. எச். எம். சீ. ஹேரத்<br>8. ஏ. ரணதுங்க | 1. பி.ஜீ. ஞானவதி | 275 | 03 | 5894 |

5-377

---

## கொலொன்ன பிரதேச சபை

### தவணை அறிக்கை பெற்றுக்கொள்ளல்

கொலொன்ன பிரதேச சபையின் செயலாளரான கே. வீ. பீ. ஐராங்கனி ஆகிய நான், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய குறித்த 139 ஆவது பிரிவின் நியதியின் பிரகாரம் கொலொன்ன பிரதேச சபை அதிகாரங்கள் கடமைகளை நிறைவேற்றும் அதிகாரி என்ற வகையில் கொலொன்ன அதிகாரப் பிரதேசத்தினுள் அபிவிருத்தி வேலைகளை நடாத்துவதும் சேவைகளை வழங்குவதை இலகுபடுத்தும் நோக்கில் கொலொன்ன பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் அடங்கும் சகல சொத்துக்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்வது தொடர்பாக தீர்மானம் 2016, மாச்சு 28 ஆந் திகதி தீர்மான இலக்கம் 284 இன் கீழ் எடுக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

கே. வீ. பீ. ஐராங்கனி,
செயலாளர் மற்றும் அதிகாரங்கள், கடமைகளை
நிறைவேற்றும் அதிகாரி,
கொலொன்ன பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கொலொன்ன,
2016, மாச்சு 28.

### தீர்மானம்

கொலொன்ன பிரதேச சபையின் செயலாளரான கே. வீ. பீ. ஐராங்கனி ஆகிய நான், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9.3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய குறித்த சட்டத்தின் 139 ஆவது பிரிவின் நியதியின் பிரகாரம் கொலொன்ன பிரதேச சபை அதிகாரங்கள் கடமைகளை நிறைவேற்றும் அதிகாரி என்ற வகையில் கொலொன்ன அதிகாரப் பிரதேசத்தினுள் அபிவிருத்தி வேலைகளை நடாத்துவதும் சேவைகளை வழங்குவதை இலகுபடுத்தும் நோக்கில் கொலொன்ன பிரதேச சபையினால் காலத்துக்குக்காலம் நியமித்திடும் மாதிரிகளின் மூலம் ஒவ்வொரு குடும்ப அலகுகளினதும் சொத்துரிமைகளுக்குரிய தகவல்களை திரட்டுதல் பொருத்தமாகுமென தீர்மானிக்கின்றேன்.

5-218

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.